www.Padasalai.Net www.TrbTnpsc.com



# ஜெய பாரதம்

## போட்டித் தேர்வு பயிற்சி மையம், வேதாரண்யம்

## இந்திய அரசியலமைப்பின் வரலாறு

1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15ஆம் நாள் இந்தியா ஆங்கிலேய ஆட்சியிலிருந்து விடுதலை அடைந்தது. தற்போது நடைமுறையில் உள்ள இந்திய அரசியலமைப்பு 1949ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் அரசியலமைப்பு நிர்ணய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, 1950 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் நாள் முதன் முதலாக நடைமுறைக்கு வந்தது. ஆங்கிலேயர் இயற்றிய பல்வேறு சட்டங்களின் வெளிப்பாடே இந்திய அரசியலமைப்புச் சட்டமாகும். கிழக்கிந்திய வணிகக் குழுவின் நிர்வாகம் அச்சட்டங்களின் வாயிலாக நடைபெற்றது. அதன் பின்னர் இங்கிலாந்து அரசு நேரடியாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின் 1858 முதல் 1947 வரை பல்வேறு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

## வணிகக்குழுவின் கீழ் சட்ட வளர்ச்சி:(1773-1858)

### ஒழுங்குமுறைச் சட்டம்-1773

இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் ஒழுங்குமுறைச் சட்டம் 1773 மிக முக்கியமானது. ஏனெனில் இந்தியாவில் கம்பெனி நிர்வாகத்தின் மீது பிரிட்டிஷ் நாடாளுமன்றம் தனது கட்டுப்பாடுகளைக் கொண்டுவருவதற்கான முதல் முயற்சியாக அச்சட்டம் அமைந்தது. அதன்படி,

1. இச்சட்டம் முதன்முறையாக, கம்பெனி ஆட்சிக்காக எழுதப்பட்ட அரசியலமைப்பு ஒன்றை வழங்கி, கம்பெனியின் அரசியல் மற்றும் நிர்வாகப் பொறுப்புகளை அங்கீகரித்தது.
2. வங்காளம், பம்பாய், சென்னை ஆகிய மாகாணங்களின் நிர்வாக அமைப்புகளை ஒரே அதிகார அமைப்பின் கீழ் கொண்டுவர வகை செய்தது.
3. வங்காள ஆளுநரை மேற்கண்ட மூன்று மாகாணங்களுக்கும் தலைமை ஆளுநராக நியமித்தது. அத்தகைய முதல் தலைமை ஆளுநர் வாரன் ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆவார்.
4. தலைமை ஆளுநருக்கு உதவிபுரிய நான்கு உறுப்பினர்களைக் கொண்ட ஆட்சிமன்றம் அமைக்கப்பட்டது.
5. கல்கத்தாவில் ஒரு தலைமை நீதிமன்றம் அமைக்கப்பட்டது(1774).
6. ஆண்டறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.
7. ஊழியர்களின் தனியார் வியாபாரம் தடை செய்யப்பட்டது.

### பிட் இந்தியச் சட்டம் 1784:



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

1773 ஆம் ஆண்டுச் சட்டத்தின் நடைமுறைச் சிக்கல்களைக் களைய இச்சட்டம் உருவாக்கப்பட்டது.

1. கம்பெனியின் இயக்குநர் குழுவுக்கு வணிகப் பொறுப்பு மட்டுமே அளிக்கப்பட்டது.
2. அரசியல், விவகாரங்களைக் கவனிப்பதற்காக ஆறு உறுப்பினர்களைக் கொண்ட கட்டுப்பாடு வாரியம் புதிதாக அமைக்கப்பட்டது.
3. இந்திய நிர்வாகம் தொடர்பான அலுவல்களைக் கவனிக்க இங்கிலாந்து அரசாங்கத்தில் தனித்துறை ஒன்று அமைக்கப்பட்டது.

**சாசனச் சட்டங்கள்:**

ஒவ்வொரு இருபதாண்டுகளுக்கு ஒருமுறை சாசனச் சட்டங்கள் கிழக்கிந்தியக் கம்பெனியின் சாசனத்தை நீட்டிக்க வகை செய்தது.

**சாசனச் சட்டம் 1813:**

1. பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இந்திய மாகாணங்களின் மீது கொண்டிருந்த கட்டுப்பாடுகள் பெருகின.
2. இந்தியாவில் கம்பெனிக்கு இருந்த ஏகபோக வணிக உரிமை தடை செய்யப்பட்டது.(சீனாவுடனான வணிகம் தவிர)
3. இந்தியரின் கல்விக்கென ஆண்டுக்கு 1லட்சம் ரூபாய் செலவிட ஒப்புதல் வழங்கியது.

**சாசனச் சட்டம் 1813:**

1. தலைமை ஆளுநரின் கவுன்சில் கூட்டங்களை சட்டமியற்றுவதற்கான கூட்டங்கள் என்றும், நிர்வாகக் கூட்டங்கள் என்றும் பிரித்துப் பார்க்க வகை செய்தது.
2. அனைத்து சிவில், ராணுவ நிர்வாகங்களைக் கட்டுப்படுத்தி கண்காணிக்கின்ற அதிகாரம் தலைமை ஆளுநரின் கவுன்சிலுக்கு அளிக்கப்பட்டது. கூடுதலாக சட்ட உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்பட்டார்.(மெக்காலே)
3. எனவே, மைய அரசை வலிமை உடையதாக்கியது. மாகாணங்கள் தங்களுக்கென சட்டமியற்றிக் கொள்ளும் உரிமைகளை இழந்தன.
4. சீனாவில் கம்பெனிக்கு இருந்த ஏகபோக வாணிக உரிமை தடை செய்யப்பட்டது.
5. அரசுப் பணியில் சேர திறமை ஒன்றே தகுதி என முடிவு செய்தது.
6. வெள்ளையர்கள் இந்தியாவில் நிலம் வாங்க இசைவளித்து குடியேற்றத்திற்கு வழிவகுத்தது.
7. வங்காளத்தின் தலைமை ஆளுநர் பதவி இந்தியாவின் தலைமை ஆளுநர் என மாற்றப்பட்டது.(இந்தியாவின் முதல் தலைமை ஆளுநர் வில்லியம் பெண்டிங் பிரபு)

**சாசனச் சட்டம் 1853**

1. சட்டமியற்றும் பணிக்காக தலைமை ஆளுநரின் கவுன்சிலில் மேலும் ஆறு உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டனர்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com



2. கவுன்சிலின் சட்டமியற்றும் பணியும், நிர்வாகப்பணியும் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டன.
3. அரசுப்பணிக்கு போட்டித் தேர்வை அறிமுகம் செய்தது.(1854 மெக்காலே குழு)
4. முதன் முறையாக உள்நாட்டு மக்களுக்கு மைய சம பிரதிநிதித்துவம்.

**இந்திய அரசாங்கச் சட்டம் 1858:**

1. கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்தின் கீழ் இருந்த இந்திய ஆட்சிப் பகுதிகள் அனைத்தும் நேரிடையாக பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் வந்தன.
2. அப்பகுதிகளை பிரிட்டிஷ் அரசியின் பேரில் நிர்வகிக்க இந்திய அரசுச் செயலர் என்ற புதிய பதவி இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டது. அவருக்கு உதவ ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.
3. இந்தியாவின் தலைமை ஆளுநர் அரசப்பிரதிநிதி என அழைக்கப்பட்டார். அதன்படி முதல் அரசுப் பிரதிநிதி(வைசிராய்) கானிங்பிரபு ஆவார்.

## இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்

**அரசியலமைப்பு நிர்ணய சபை:**

- அரசியலமைப்பு நிர்ணயசபை பொதுவாக ஒரு இறையாண்மை, மக்களாட்சி நாட்டில் அரசியலமைப்பை உருவாக்கும் பணியை அந்நாட்டு மக்களுக்கு பிரதிநிதிகள் அடங்கிய ஓர் அமைப்பே மேற்கொள்ளும் அரசியலமைப்பு இயற்றி ஏற்றுக் கொள்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும் அத்தகைய அமைப்பதற்கு அரசியலமைப்பு நிர்ணய சபை.
- 1919 - இந்திய அரசாங்க சட்டத்தின் எதிர்ப்பு
- 1928 – மே 19 பட்பாயில் நடைபெற்ற அனைத்துக் கட்சி மாநாடு- மோதிலால் நேரு தலைமை – நேரு அறிக்கை முழு நிறைவான அரசியல் அமைப்பை உருவாக்க முதல் முயற்சி.
- 1936 – லக்னோ காங்கிரஸ் மாநாடு.
- வெளியிலிருந்து திணிக்கப்படும் எந்த விதமான அரசியலமைப்பினும் ஏற்க முடியாது எனவும் வயது வந்தோர் வாக்குரிமை மூலம் தேர்ந்தெடுக்கப்படும், அரசியல் நிர்ணய சபையால் உருவாக்கப்படும் அரசியலமைப்பினையே ஏற்கமுடியும். என தீர்மானம் நிறைவேறியது.
- 1940 – பிரிட்டிஷ் அரசு அறிவித்த ஆகஸ்ட் நன்கொடை முதல் முறையாக அரசியல் நிர்ணயசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- 1942 – கிரிப்ஸ் குழு – புதிய அரசியலமைப்பை உருவாக்கும்.பணி முற்றிலும் இந்தியர்கள் வசம் விடப்படும். அதை அரசு ஏற்றுக் கொள்ளும்.
- 1946 – மார்ச் 15 – அட்லி அறிவிப்பு
- 1946 – அரசியலமைப்பு நிர்ணயசபை அமைக்கப்பட்டது.
    - ◈ மொத்த உறுப்பினர்கள் - 385
    - ◈ மாகாணம் - 292
    - ◈ சுதேச அரசு - 93



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

◈ முதன்மை ஆணையர் - 4

- தேர்தல் ➡ 296 ⇨ 1946 ஆகஸ்டில்
  208 ⇨ இடம் காங்கிரஸ்
  73 ⇨ முஸ்லீம்லீக்
- நிர்ணய சபை – 1946 டிசம்பர் 9 – சச்சிதானந்தா சின்கா (முதல் தலைவர்)
- 1946 டிசம்பர் 11 – டாக்டர் இராஜேந்திர பிரசாத்
- டிசம்பர்-13 ⇨ குறிக்கோள் தீர்மானம்.
  1947 ஜனவரி 22 ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- டாக்டர்.பி.ஆர் அம்பேத்கார் தலைமையில் அரசியல் சட்ட வரைவுக்குழு 1947 ஆகஸ்ட் 29ல் அமைக்கப்பட்டது.
- உறுப்பினர்கள் : (1947 ஜீலை – செப்டம்பா 1948)
  - ◈ கோபால சுவாமி அய்யங்கார்
  - ◈ அல்லாடி கிருஷ்ண மூர்த்தி ஐயர்
  - ◈ டாக்டர் K.M முன்சஷி
  - ◈ சையது முகமது சாதுல்லா
  - ◈ N.மாதவராவ்(P.L மிட்டர்)
  - ◈ T.T கிருஷ்ணமாச்சாரி (T.P கெய்தான்)

**சட்டக்குழுக்கள்: (13 குழுக்கள்):**

- மத்திய அதிகார குழு ➡ ஜவஹர்லால் நேரு.
- அடிப்படை உரிமைகள் மற்றும் சிறுபான்மையினர் குழு – வல்லபாய் படேல்
- மாகாண அரசியலமைப்புக்குழு ➡ வல்லபாய் பட்டேல்
- மத்திய அரசியல் அமைப்புக் குழு ➡ ஜவஹர்லால் நேரு
- வரைவுக்குழு ➡ பி.ஆர் அம்பேத்கார்
- கொடி உருவாக்ககுழு ➡ ஜே.பி கிருபாளனி
- வகைப்படுத்தும் குழு ➡ கே.எம். முன்ஷி
- இந்திய அரசியலமைப்பு சபையின் ஆலோசகர் ➡ பி.என்.ராவ்
- 1948 பிப்ரவரியில் சட்டவரைவை வெளியிட்டது. (பொதுமக்கள் கருத்து மற்றும் வெளிப்பாடுக்காக)
- அடுத்த கூட்டம் 1948 நவம்பரில் கூடி வரைவின் அமைப்பு மற்றும் விவரங்களை முழுவதுமாக ஆராய்ந்தது.
- 1949 நவம் 26 ஏற்றுக்கொள்ளப்பட்டது.(இந்திய சட்ட தினம்)
- கடைசி கூட்டம் 1950- ஜனவரி 24
  ◈டாக்டர்.ராஜேந்திர பிரசாத் ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டு குடியரசு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 284 ➡ உறுப்பினர்கள் கையெழுத்து



http://www.trbtnpsc.com/2013/07/trb-questions-and-study-materials.html

- 1950 ஜனவரி 26 குடியரசு தினம்.
- 2 வருடம் 11 மாதம் 18 நாட்கள்
- 395 Art ➡ 22 Part ➡ 8 Schedule
- 485 Art ➡25 Part ➡ 12 Schedule
- இந்திய அரசியலமைப்பு சட்ட ஆலோசகர் எம்.என் ராய் (அரசியல் தத்துவ மேதை)

## இந்திய தேசிய அடையாளங்கள்

**தேசியக் கொடி:**

- காவி ☞ தியாகம், தைரியம்
- வெண்மை ☞ அறவழியில் முன்னேறிச் சென்று
- பச்சை ☞ அமைதியினையும், செழுமையினையும் பெற்றுத்தர தூண்டுகிறது.

| நீளம் | : | அகலம் |
|---|---|---|
| 3 | : | 2 |

- சக்கரம் சாரநாத் அசோகத் தூணின் தலைப்பகுதிக்கு கீழ் உள்ள வடிவம்(24RING)
- கரும்பச்சை ➡ இந்தியாவின் செழிப்பையும் வளமான நிலத்தையும், பசுமையினையும், நம்பிக்கையினையும் குறிக்கும்.
- அரசியல் நிர்ணய சபை தேசியக்கொடியை ஜீலை 22, 1947 ல் ஏற்றுக்கொண்டது.
- முதன்முறையாக ஆகஸ்ட் 15, 1947 – செங்கோட்டை
- கொடி குழு தலைவர் ➡ ஜே.பி.கிருபாளனி
- வடிவமைப்பு ➡ பிங்காலி வெங்கையா நாயுடு.

**தேசிய கீதம்:** (ஜன கண மண)

- ◈ இயற்றியவர் ➡ ரவிந்திரநாத் தாகூர்
- ◈ முதலில் பாடப்பட்ட நாள் ➡ டிசம் 27 – 1911, INC மாநாடு
- ◈ ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் ➡ ஜனவரி 24, 1950
- ◈ ஆங்கில மொழிபெயர்ப்பு ➡ 1919 ☝ ரவிந்திரநாத் தாகூர்

*(மார்னிங் சாங் ஆஃப் இந்தியா) 'இந்தியாவின் அதிகாலை பாடல்' என்ற தலைப்பில் மொழி பெயர்த்தார்.*

- ❁ காலம் ✍ 52 வினாடி
- ❁ மொழி ✍ வங்காளம்

- ➡ 1912ல் தாகூரின் தத்துவபோதினி பத்திரிக்கையில் பாரத விதாதா என்னும் தலைப்பில் முதன்முதலில் பாடப்பட்டது.
- ➡ தேசிய கீதத்தில் எந்த கீதத்தைப் பற்றியும் கூறவில்லை.
- ➡ 1913-கீதாஞ்சலி.

# இந்திய அரசியலமைப்பின் சிறப்புக்கூறுகள்

1. நீண்ட எழுதப்பட்ட அரசியலமைப்பு
2. பல்வேறு மூலங்களிலிருந்து எடுத்தாளப்பட்ட அரசியலமைப்பு
3. நெகிழும் மற்றும் நெகிழாத் தன்மையுடையது.
4. கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி அமைப்புக் கூறுகள்.
5. மக்கள் இறைமை அடிப்படையில் அமைந்தது.
6. நாடாளுமன்ற ஆட்சி முறை.
7. இசைவான நாடாளுமன்ற இமையாண்மை மற்றும் நீதித்துறை மேலாண்மை.
8. சுதந்திரமான மற்றும் ஒருங்கிணைந்த நீதித்துறை.
9. வயது வந்தோர் வாக்குரிமை.
10. அடிப்படை உரிமைகள்.
11. அடிப்படை கடமைகள்.
12. அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைக் கோட்பாடுகள்.
13. ஒற்றைக் குடியுரிமை.
14. சமயச் சார்பின்மை.
15. சுதந்திரமான அரசியலமைப்பு அமைப்புகள்.
16. நெருக்கடி கால சட்டவகை முறைகள்.
17. மூன்றடுக்கு அரசாங்கம்.

**பல்வேறு மூலகங்களிலிருந்து எடுத்தாப்பட்ட பகுதிகள் உள்ளடக்கியது:**

| மூலம் | பெறப்பட்ட பகுதிகள் |
|---|---|
| **இந்திய அரசாங்கச் சட்டம் 1935** | கூட்டாட்சித் தத்துவம், ஆளுநர் பதவி, நீதித்துறை அமைப்பு, அரசுப்பணியாளர்கள் தேர்வாணையம்,நெருக்கடி நிலைகள் மற்றும் அரசு நிர்வாகம். |
| **பிரிட்டன் அரசியலமைப்பு** | பாராளுமன்ற அரசாங்கம், சட்டத்தின் ஆட்சி, சட்டம் இயற்றும் வழிமுறைகள், ஒற்றைக் குடியுரிமை, கேபினெட் அமைச்சரவை, நீதிப்பேராணைகள், பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகள்,ஈரவை அரசாங்கம். |
| **அமெரிக்க அரசியலமைப்பு** | அடிப்படை உரிமைகள்,நீதித்துறை சுதந்திரம், நீதித்துறை மறு ஆய்வு, குடியரசுத் தலைவர் மீதான குற்ற விசாரணை, உச்ச நீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற நீதிபதிகளின் பதவி நீக்க முறை, துணைக் குடியரசுத்தலைவர் பதவி. |
| **அயர்லாந்த அரசியலமைப்பு** | அரசுக்கொள்கையினை நெறிப்படுத்தும் கோட்பாடுகள், மாநிலங்களவைக்கு உறுப்பினர்கள் நியமனம், குடியரசுத் |

| | |
|---|---|
| | தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை. |
| **கனடா அரசியலமைப்பு** | மத்தியில் வலுவான மைய அரசைக் கொண்ட கூட்டாட்சி முறை, மைய அரசின் எஞ்சிய அதிகாரங்கள், மைய அரசால் ஆளுநர் நியமனம், உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனை வரம்பதிகாரம். |
| **ஆஸ்திரேலிய அரசியலமைப்பு** | பொதுப்பட்டியல், வியாபாரம்,வணிகப் போக்குவரத்துச் சுதந்திரம், இரு அவைகளின் கூட்டு அமர்வு. |
| **ஜெர்மனியின் வெய்மர் அரசியலமைப்பு** | நெருக்கடி நிலையின் போது அடிப்படை உரிமைகள் நிறுத்திவைப்பு (விதிகள் 20,21ஐ தவிர) |
| **சோவியத் ரஷ்யா அரசியலமைப்பு** | அடிப்படைக் கடமைகள், முகப்புரையின் சமூகப் பொருளாதார மற்றும் அரசியல் நீதி, ஐந்தாண்டு திட்டம். |
| **பிரெஞ்சு அரசியலமைப்பு** | குடியரசு அமைப்பு, முகப்புரையின் சுதந்திரம் சமத்துவம் மற்றும் சகோதரத்துவம் பற்றிய குறிக்கோள்கள். |
| **தென் ஆப்ரிக்கா அரசியலமைப்பு** | அரசியலமைப்பைத் திருத்தும் முறை, மாநிலங்களவைக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல். |
| **ஜப்பான் அரசியலமைப்பு** | சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறை. |

